(2) தகவல் கோரல்.

(அ) நேரமில்லாத காரணத்தால் பதிலளிக்கப் பெறாத வினாக்களை மறுநாள் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. சி. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்...... நேற்று இரவு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். நான் அழைத்தபிறகுதான் எழுந்திருக்கவேண்டும். திரு ரா. வெங்கிடு சாமி என்கிற வெங்கிடு........

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, நேற்றையதினம் 10 மணிக்கு மேல் கேள்வி நேரத்தை நீட்டித்தீர்கள். இறுதியாக, திரு. கு. ரமணி வினா வந்து, அடுத்த நாளைக்கு ஒத்தி வைக்கப் பட்டது. இப்போது பாக்கி இருக்கும் 8 கேள்விகளில் 6 கேள்விகள் எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் கொடுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இன்றைக்கு இந்த முடிவை எடுத்ததற்கு காரணம், நாளையோடு பொது விவாதம் முடிகிறது. இன்றைக்கு ஏராளமான உறுப் பினர்கள் பேசவேண்டும் என்று பெயர் கொடுத்து இருக்கிறார் கள். இன்னும் இருக்கிற கேள்விகளை எடுத்துக்கொண்டால் 1 மணி நேரம் ஆகும். ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வேறு எடுததுக்கொள்ளப்பட வேண்டும். நேரம் போதாது. பட்ஜெட் பொதுவிவாதத்தில் ஓரிருவர் பேசுவதைக் குறைத்துக் கொண்டால் எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவாதத்திற்கு அதிக நேரம் வேண்டும் என்பதற்காக அந்தக் கேள்விகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அந்த விடுபட்ட கேள்விகளை எல்லாம் நாளைக்குக் கேள்விப் பட்டியலில் சேர்த்துக்கொண்டு, அதை முதலில் எடுத்துக்கொண்டு விட்டால் நல்லது. உறுப்பினர்கள் எல்லோரும் விரும்புகிற காரணத்தால், அந்த ஏற்பாடு செய்வது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே நான் அஜெண்டா அனுப்பிவிட்டேன். இப்போது மிகுதியாக இருக் கிற கேள்விகள் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும். நாளைக்கு அந்தக் கேள்விகள் முடியவில்லைஎன்றால் மறு நாள் எடுத்துக் கொள்ளப்படும். இப்படி தொடர் சங்கிலியாக அது இருக்குமானால் நல்லது. விடுபட்ட கேள்விகள் நாளைக்கு இணைத்துக்கொள்ளப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, பல துறைகளைச் சேர்ந்த அமைச்சர்களிடமிருந்து நேரடியாக பதில் பெற முடியவில்லை. இந்த மன்றத்தில் தொடர்ந்து இந்த நிலைமை இருப்பதால், அந்தப் பக்கத்தில் இருந்து ஒரு நாளும், இந்தப் பக்கத்தில் இருந்து ஒரு நாளும் கேள்விகள் ஆரம்பிப்பது நல்லது என்பதை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

(3) அறிவிப்புகள்.

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1979).

2. 1979 ம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1979).

3, 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1979).

மேலும், சட்டமன்ற மேலவையில், தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1979) ஆய்வு செய்யப்பட்டு, பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளது என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.